269

269

உ

T. P. ராஜலெக்ஷிமி, K. S. தேவுடுஐயர்,
K. B. சுந்தராம்பாள் முதலியோர் பாடிவருகிற

மாஸ்டர் S. G. கிட்டப்பாவின்

# மரண கீதம்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 OCT 1934
MADRAS

முத்தமிழ் க்ஷேத்திர மதுரகவி
V. நடராஜக் கவிராயரவர்கள் இயற்றியது.

ச. சந்தன மணியகாரர்,
புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

1934 [விலை 0-1-0

...ஷ்ணுபிரஸ், மதுரை-34.

0-, IMND3, K.
N34.
171948

உ

இந்தியாவெங்கும் சங்கீதத் திக்விஜயம் செய்து
வெற்றிக்கொடி நாட்டிய செங்கோட்டை
சங்கீதரத்னம்

## மாஸ்டர் எஸ். ஜி. கிட்டப்பாவின்

# மரண கீதம்.

விநாயகர் துதி

வேண்பா

மட்டிலடங் காதபுகழ் மானிலத்தி லேபடைத்த
கிட்டப்பா வின்மரண கீதத்தை—திட்டமுடன்
பாடுதற் கேற்றவருள் பாலிப்பா னென்னுளத்தில்
நாடுமுக் கண்ணனின் ஞள்.

---

தாழ்த்தப்பட்ட சோதரரைத் தாங்குவாருண்டோ
என்ற மெட்டு.

பல்லவி.

நாடகத்தில் கிட்டப்பாபோல் நடிகர் வேறுண்டோ
நடிகர் வேறுண்டோ சொல்ல நாவுதான்ரெண்டோ (நா)

அநுபல்லவி.

தேடக்கிடையாத தங்கம் தேசாபிமானச்சிங்கம்
நாடெல்லாங்கொண்டாட விண்ணில் நாட்டமுற்றாரே
நாட்டமுற்றாரே சொர்க்க நலமும்பெற்றாரே (நா)

தொகையரா.

பாடலுக்கோ ஒருகோடி மக்கள்வரை செவிகொடுத்துப்
பார்த்திருப்பார்
ஆடலுக்கோ இருகோடி மக்கள்வரை கண்ணிமையா
தமைந்திருப்பார்
கூடலுக்கோ முக்கோடி மக்கள்வரை வியந்துமனங்
குளிர்ந்திருப்பார்
நாடலுக்கோ நால்கோடி மக்கள்வரை எதிர்பார்த்து
நலிவாரந்தோ.

பாட்டு.

ஞாலமெல்லாம் புகழும் ஞானசங்கீதாமிர்தன்
சீலன் நடராஜன்சொல்லும் ஜீவகாருண்யன்
ஜீவகாருண்யன் மதுர கானலாவண்யன் (நா)

---

பகதூர் பகவத் சிங்கம் என்ற மெட்டு.

பல்லவி.

ஞானேஸ் வரன் கிட்டப்பா
நம்மைப்பிரிந் தாரப்பா (ஞா)

அநுபல்லவி.

தீனபந்து ஸாம்கங்காதரர்
சேயனும் சம்ப்ப தாயனும்
தேவகானவி நோதகீத
தீரனும் உப காரனும் (ஞா)

## தோகையரா.

சீர்மிகுஞ் செங்கோட்டை நகரிலே ப்ரம்மகுலம்
மேன்மையுறச் செனித்திட்டவன்
பேர்மிகுஞ் சங்கரதாஸ் திருவருளால் நாடகத்தில்
பெருமையுற நடித்திட்டவன்
ஏர்மிகுஞ் சென்னைநகர் கவர்னராம் லார்ட்கோஷன்
ஈந்தமெடல் பூண்டிட்டவன்
பார்புகழ் கன்னையா நாடகக் கம்பேனி
பாங்குறப் புரிந்திட்டவன்

## பாட்டு.

அந்தோ இறந்தனரே
அரன்பாதஞ் சேர்ந்தாரே (ஞா)

## தோகையரா.

தருமமே குடிகொண்டு உயர்கலா சாலைக்குத்
தக்கநிதி யளித்திட்டவன்
திருவரங் கத்திலே மோஹினி யவதாரத்
திருவிழாச் செய்திட்டவன்
கருணையே யுருவமர் யுற்றநம் காந்திசொல்
கதர்நிதிக் களித்திட்டவன்
மருவிலாத் தேசாபி மானமே பெரிதென
மாண்புடன் மதித்திட்டவன்.

## பாட்டு.

மதுர கவிப்ரபல்ய
மைந்தன் நட ராஜன்சொல் (ஞா)

தாயிடத்தில் அன்பில்லாத என்றமெட்டு.

## பல்லவி.

ஞானிலத்தில் கிட்டப்பாவை நாமிழந்தோமே
நாமிழந்தோமே மனம் நலிந்துநின்றோமே—இந்த (ஞானி)

## அநுபல்லவி.

ஞானசங்கிதச்சிங்கம் நல்லோர்கொண்டாடுந்தங்கம்
நாடகத்திற்கியாதிபூண்ட நன்மணிதானே
நன்மணிதானே இரு கண்மணிதானே (ஞானி)

## தோகையரா.

ஆயிரத்தித் தொளாயிரத்துப் பதினான்காம் வருடமதில்
அவனி மீதே
நேயமுடன் நடிகரென வெளிவந்தார் மக்களெல்லாம்
நேசங் கொள்ள
ராயல்தியேட் டரியென்னும் நர்த்தனகான சபாவினிலே
நாடகத்திற்கோர்
மேயரென மன்னர்களால் மெடல்பூண்ட ராஜசிங்கம்
விண்ணுற்றாரே.

## பாட்டு.

மேதினியுள்ளோர்கொண்டாட விற்பனவல்லோர்கள்நாட
சாதுநடராஜன்கீதம் சாற்றுவோமையா
சாற்றுவோமையா தூய ராற்றுவோமெய்யா (ஞானி)

### இந்தியா தேசமடி என்றமெட்டு.

### கண்ணிகள்.

செங்கோட்டையூரனடி செல்வக்குபேரனடி
சங்கீத கிட்டப்பாவாம் எந்தன்தோழியே
சாயுஜ்யஞ் சேர்ந்தாரடி எந்தன்தோழியே

ஐந்துபிராயமதில் ஆனழகன்பாடலுற்றார்
சுந்தரமாரனடி எந்தன்தோழியே
சொகுசானமன்னனடி எந்தன்தோழியே

தாலமெல்லாம்புகழும் கசாவ்தாரத்திலே
சீலவிஷ்ணுவாகவந்தா எந்தன்தோழியே
சீர்த்தியையென்னசொல்லுவேன் எந்தன்தோழியே

பஞ்சாப்படுகொலைக்கே பண்டுதான்சேர்ந்தாரடி
எஞ்சாதநாடகத்தால் எந்தன்தோழியே
ஏற்றபொருளீந்தாரடி எந்தன்தோழியே

முத்தமிழ்க்ஷேத்ரமடி முழங்குஞ்சங்கீதமடி
பக்தன்நடராஜன்துதி எந்தன்தோழியே
பாடிவருவாரடி எந்தன்தோழியே

---

### ஆழ்ந்த யோஜனைகள் செய்தார் - என்ற மெட்டு

### பல்லவி

த்யாகன்கிட்டப்பா இறந்தார் - நம்மைப்பிரிந்தார்
செல்வபோகமுந் துறந்தார் (த்யா)

171948.

## அனுபல்லவி

சாகரஞ்சூழ்ந்த சகமதி லேகாடக
சங்கீதமார்க்கம் காட்டினர் — வெற்றிக்கொடியைச்
சம்ப்ரதாயமாய் நாட்டினர் (த்யா)

## தோகையரா.

செங்கோட்டை நகரிலே தங்காத ரர்க்குற்ற
சேயனு யவதரித்தார்
சிறந்திட்ட ராயல்தி யேட்டரில் நடிகராய்
தீரமுடனே நடித்தார்
சிங்கார லங்கையில் இந்தியவர்த் தகர்சங்கச்
சார்பிலே திகழும் ஸ்ரீமான்
திவான்பகதூர் கேசவப் பெரியோரால் தங்கப்
பதக்கமே பெற்ற பூமான்
மங்காத திலகர்சுய ராஜ்ஜிய நிதிக்காக
மட்டிலாப் பொருளு மீந்தார்
மாதர் திலகமென் னுஞ் சுந்தராம்பாளுடனே
மகிபனுய்த் தோன்றி நின்ருர்
இங்காருந் தனக்குநிக ரில்லையென் றேயெண்ணி
இமையவர் நாட்டிற் சென்றே
இணையிலாச் சங்கீத வுண்மைதனை தேவர்கட்
கியம்பினர் போலு மந்தோ

## பாட்டு

எத்தலத்துங் கீர்த்திபெற்ற முத்தமிழ்ச்சங் கீதமுற்ற
வித்வநடராஜன்பாமாலை சூடுவோன் புகழ்நீடுவோன் (த்யா)

## கிளிக்கண்ணி மெட்டு
### கண்ணிகள்

செங்கோட்டை நகர்தனிலே சிறந்திட்ட செல்வனடி
சங்கீத கிட்டப்பாவாம் கிளியே
சாயுஜ்ஜியம் அடைந்தாரடி (செங்)

கிட்டப்பாவென்று சொன்னால் கிட்டுமே ஞானமெல்லாம்
மட்டில்லா கீர்த்திபெற்ற கிளியே
மன்னவரல்லவோடி (செங்)

சின்னவயதுமுதல் செவிக்கின்பந்தந்தாரடி
இன்னமுந்தருகின்றாரே கிளியே
இன்பமுள்ள பிளேட்டினிலே (செங்)

எத்தனையோ நடிகர் இத்தலத்திலே நடித்தார்
அத்தனைக்கும் மேலாகவே கிளியே
ஆடல்திறங்கண்டாரடி (செங்)

கன்னையா கம்பேனிக்கே கண்கள் போலேயிருந்தார்
தன்னலமில்லாரடி கிளியே
சார்ந்தவர்க்காதாரனடி (செங்)

இந்தியா தேசஞ்செய்த எழிலான மாதவத்தால்
வந்த நற்சீலனடி கிளியே
வாய்ந்திடுமுதாரனடி (செங்)

தீரா வயிற்றுவலி யாலே தியக்கமுற்று
சீரான ஈசன்பாதம் கிளியே
சென்றடைந்தார் தெய்வமாக (செங்)

முத்தமிழ் க்ஷேத்ரமதில் முழங்கும் மதுரகவி
பக்தன் நடராஜன் துதி கிளியே
பாரெல்லாம் விளங்கிடுமே (செங்)

காமிசத்ய பாமா என்ற மெட்டு

## பல்லவி

மாஸ்டர் கிட்டப் பாவும் மரணமடைந்தார் (மாஸ்)
மரணமடைந்தார்
அடைந்தார்
அடைந்தார்—நமது (மாஸ்)

## அநுபல்லவி

ஆஸ்திகமார்க்க போதன்
அரிய தமிழ்ச்சங் கீதன்
ராஜசுகுண சீலனும்
சீலனும்
சீலனும்
சீலனும்—நமது (மாஸ்)

தேவகான விநோதன்
செகம் புகழும்ப்ரைக் யாதன்
மேவுமதன ரூபனும்
ரூபனும்
ரூபனும்
ரூபனும்—நமது (மாஸ்)

முத்தமிழ் க்ஷேத்ர வாசன்
பக்தனும் நடராஜன்
நித்யசங்கீத லோலனும்
லோலனும்
லோலனும்
லோலனும்—நமது (மாஸ்)

வந்துவிட்டது உ வந்துவிட்டது

பாஞ்சாலங்குரிச்சி சண்டை என்னும் வீரசிங்கங்களான
**1, 2** பாகங்களமைந்த பூராக்கதைகள் படங்களுடன்
அடங்கிய புதிய பெரிய

# கட்ட பொம்மு கதை.




முத்தமிழ் க்ஷேத்திரம்

**P. R. M.** சாமிக்கண்ணுக்கோனர் அவர்களால்

இயற்றப்பெற்றது.

விலை அணா 0—8—0